யதார்த்த நிச்சயம் என்ற அஸ்திவாரத்தின் மூலம்

சம்பூர்ண தூய்மையை தாரணை செய்யுங்கள்

இன்று பாப்தாதா நாலாப்புறங்களிலும் உள்ள உள்நாடு-வெளிநாடு புதுப்புது குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். மதுவனத்தில் சாகார ரூபத்தில் வந்திருந்தாலும் சரி, ஆகார (சூட்சும) ரூபத்தில் அவரவர்களது சேவை நிலையத்திற்கு வந்திருந்தாலும் சரி, அனைத்து புதியவர்களிடத்திலும் நிச்சயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனெனில் நிச்சயம் என்பது இந்த பிராமண வாழ்க்கையில் சம்பன்ன நிலைக்கான அஸ்திவாரம் ஆகும். அஸ்திவாரம் உறுதியாக இருந்தால் எளிதாக மற்றும் தீவிர வேகத்தில் சம்பூர்ன நிலை அடைவது உறுதியாகி விடும். நிச்சயமும் பல விதத்தில் இருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். நான் பரமாத்மா தந்தையினுடையவனாக ஆகிவிட்டேன் என்ற யதார்த்த நிச்சயம், தனது ஆத்ம சொரூபத்தை அறிவது, ஏற்றுக் கொள்வது, நடப்பது மற்றும் தந்தை யையும் அவ்வாறே அறிந்து கொள்வது - இது தான் யதார்த்த நிச்சயமாகும்.

இரண்டாவது நிச்சயம் - யோகாவின் மூலம் சிறிது நேரத்திற்கு அசாந்தியிலிருந்து சாந்தியின் அனுபவம் செய்வது, மேலும் இடத்தின் சக்திசாலியான அமைதி நிறைந்த சூழ்நிலை ஈர்ப்பது அல்லது பிராமணக் குடும்பபம், பிராமண ஆத்மாக்களின் ஆன்மீக அன்பு மற்றும் தூய்மையான வாழ்க்கையின் பிரபாவம் ஏற்படுவது, தொடர்பில் இருப்பது நன்றாக இருக்கிறது, உலக சூழ்நிலையை ஒப்பிடும் போது இந்த தொடர்பு நன்றாக இருக்கிறது, ஞானமும் நன்றாக இருக்கிறது, குடும்பமும் நன்றாக இருக்கிறது, சூழ் நிலையும் நன்றாக இருக்கிறது ஆக அவ்வாறு நன்றாக தோன்றுவது என்ற அஸ்திவாரத்தின் ஆதாரத்தில் நடந்து கொண்டிருக்கின்றனர். இது இரண்டாவது நம்பர் ஆகும். முதல் நம்பர் யதார்த்த நிச்சயம் இரண்டாவது நம்பர் நல்லதாக தோன்றுதல் மூன்றாவது நம்பர் உலக சம்பந்தத்தின் துக்கமான சூழ்நிலையிலிருந்து விடுபட்டு எவ்வளவு நேரம் சேவை நிலையத்திற்கு வருவார்களோ அவ்வளவு நேரம் துக்கத்திலிருந்து விடுபட்டு சாந்தியின் அனுபவம் செய்வர். ஞானத்தின் ஆழத்தில் செல்லமாட்டார்கள். ஆனால் சாந்தியில் பிராப்தியின் காரணத்தினால் சில நேரம் வருவர், சில நேரம் வராமல் இருந்து விடுவர். ஆனால் யதார்த்த நிச்சயபுத்தியுடையவர்கள் வெற்றியாளர்களாக இருப்பர். ஆரம்பத்தில் வரும்போது அசாந்தியில் களைப்படைந்து இருப்பர், அமைதிக்கான தேடல் இருக்கும். எவ்வாறு தாகமானவருக்கு ஒரு துளி தண்ணீர் கிடைத்தாலும் கூட அதை அவர் மிகப் பெரிதாக அனுபவம் செய்வார். ஆக பிராப்தியற்ற நிலையிலிருந்து பிராப்தி ஏற்படுதல், குடும்பத்தில், ஞானத்தில், யோகத்தில், சூழ்நிலையில் வேறுபாடு தென்படும். ஆரம்ப காலத்தில் மிகுந்த ஆர்வம்-உற்சாகத்துடன் நடந்து கொள்கின்றனர், மிகுந்த போதை இருக்கிறது, குஷியும் இருக்கிறது. ஆனால் முதல் நம்பருக்கான யதார்த்த நிச்சயம் என்ற அஸ்திவாரம் உறுதியாக

இல்லையெனில், இரண்டாவது அல்லது மூன்றாவது நிச்சயம் இருக்கிறது எனில் சிறிது சிறிதாக ஆரம்பத்தில் இருந்த குஷி, ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் - இதில் வித்தியாசம் வந்து விடுகிறது.

இந்த சீசனில் புதியவர்கள் அதிகமாக வந்திருக்கின்றனர், வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. இது மிகவும் நல்லதாகும். பாப்தாதாவிற்கும் புதுப்புது குழந்தைகளைப் பார்த்து குஷி ஏற்படுகிறது - மீண்டும் தனது குடும்பத்திற்கு வந்து விட்டார்கள். ஆனால் நிச்சயம் என்ற அஸ்திவாரம் உறுதியாக இருக்கிறதா? என்று சோதியுங்கள். எனது நிச்சயம் நம்பர் ஒன்னாக இருக்கிறதா? அல்லது இரண்டாம் நம்பராக இருக்கிறதா? ஒருவேளை முதல் நம்பர் நிச்சயமாக இருந்தால் தூய்மை என்ற முக்கிய தாரணை செய்வதில் எந்த சிரமமும் ஏற்படாது. கனவிலும் தூய்மை பாதிக்கப்படுகிறது எனில், அசைந்து விடுகிறது எனில் புரிந்து கொள்ளுங்கள் நம்பர் ஒன் அஸ்திவாரம் உறுதியானதாக இல்லை. ஏனெனில் ஆத்மாவின் சுயதர்மம் தூய்மை. அசுத்தம் மாற்றான் தர்மம், தூய்மை சுய தர்மம். ஆக சுயதர்மத்தின் நிச்சயம் ஏற்பட்டு விட்டது எனில் மாற்றான் தர்மம் அசைக்க முடியாது. முன்பு மிகவும் நன்றாக வந்து கொண்டிருந்தேன், இப்பொழுது என்ன ஆனது என்று தெரியவில்லை? என்று சில குழந்தைகள் கூறுகின்றனர். தந்தை யார்? எப்படிப்பட்டவர்? என்பதை அவ்வாறே அனுபவத்தில் கொண்டு வருவது கிடையாது. தந்தை கூடவே இருக்கின்றாரா? என்று கேட்டால் அனைவரும் கை உயர்த்தி விடுவீர்கள். கை உயர்த்துவது மிகவும் எளிது. ஆனால் தந்தை கூடவே இருக்கின்றார் எனில் தந்தைக்கு பாடப்படும் முதல் மகிமை சர்வசக்திவான் என்பதை ஏற்று கொண்டீர்களா? அல்லது வெறுமனே அறிந்திருக் கிறீர்களா? சர்வசக்திவான் கூடவே இருக்கின்றார் எனில் சர்வசக்திவான் முன் அசுத்தம் வர முடியுமா? வர முடியாது. ஆனால் வருகின்றது. எங்கிருந்து வருகின்றது? வேறு ஏதாவது இடம் இருக்கிறதா? திருடர்கள் தங்களுக்கென்று விசேஷ வாசலை உருவாக்கிக் கொள்கின்றனர். திருட்டு வாசல் இருக்கிறது. உங்களிடமும் மறைந்திருக்கும் திருட்டு வாசல் இல்லை தானே? சோதியுங்கள். இல்லையெனில் மாயை எங்கிருந்து வந்தது? மேலிருந்து வந்து விட்டதா? ஒருவேளை மேலிருந்து வந்து விட்டது எனில் மேலேயே அழிந்து விட வேண்டும். ஏதாவது மறைந்திருக்கும் வாசல் வழியாக வருகின்றது எனில் அது உங்களுக்கு தெரிவது கிடையாது. எனவே மாயை எந்த திருட்டு வாசலை உருவாக்கி வைக்கவில்லை தானே? என்று சோதியுங்கள். வாசலை எப்படி உருவாக்குகிறது என்பதை அறிவீர்களா? உங்களுடைய விசேஷ பலவீன சுபாவம் அல்லது சன்ஸ்காரத்தை தான் மாயை தனது வாசலாக ஆக்கி விடுகிறது. ஏனெனில் எந்த ஒரு சுபாவம் அல்லது சன்ஸ்காரம் பலவீனமாக இருக்கும் போது நீங்கள் எவ்வளவு தான் வாசலை மூடினாலும் பலவீனமான வாசலாக இருப்பதாலும், மாயை அனைத்தும் அறிந்ததாக இருப்பதனாலும் - இந்த வாசல் பலவீனமாக இருக்கிறது என்பது அதற்கு தெரிந்து விடுகிறது, இதன் மூலம் அதற்கு வழி கிடைத்து விடுகிறது. நாட்கள் செல்ல செல்ல அசுத்த சங்கல்பங்களும் வருகிறது, வார்த்தைகளும் வருகிறது, செயல்களும் ஏற்பட்டு விடுகிறது. வாசல் திறந்திருக்கிறது அல்லவா! அதனால் தான் மாயை வருகிறது. பிறகு கூடவே இருக்கின்றார் என்று எப்படி கூற முடியும்? சொல்லும் போது சர்வசக்திவான் கூடவே இருக்கின்றார் என்று கூறுகின்றோம். பிறகு இந்த பலவீனம் எங்கிருந்து வந்தது? பலவீனங்களை வைத்துக் கொள்ள முடியுமா? முடியாது தானே? பிறகு ஏன் வைத்துக்

கொள்கிறீர்கள்? தூய்மை என்பதில் எந்த ஒரு விகாரமாக இருக்கட்டும், பேராசை எடுத்துக் கொள்ளுங்கள். சாப்பிடுவது-குடிப்பதில் மட்டும் பேராசை இருப்பது கிடையாது. அணிந்து கொள்வதில், சாப்பிடுவதில், இருப்பதில் எனக்கு எந்த ஈர்ப்பும் இல்லை என்று சிலர் புரிந்து கொள்கின்றனர். என்ன கிடைக்கிறதோ, என்ன சமைக்கிறார்களோ அது போதும். ஆனால் முன்னேற முன்னேற மாயை பேராசை ராயல் மற்றும் சூட்சும ரூபத்தில் வருகிறது. அந்த ராயல் பேராசை எது? மாணவர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியராக இருந்தாலும் சரி, இருவரிடத்திலும் மாயை ராயல் பேராசை கொண்டு வருவதற்கு முழு முயற்சி செய்கிறது. மாணவர்களை எடுத்துக் கொள்ளுங்கள், மிக நல்ல நிச்சயபுத்தியுடையவர்கள், சேவாதாரிகள், அனைத்திலும் நன்றாக இருக்கின்றனர். ஆனால் முன்னேற்றத்தை நோக்கி செல்லும் போது ராயல் பேராசை வருகிறது - நான் இவ்வளவு செய்கின்றேன், அனைத்து வகையிலும் உதவியாளராக இருக்கின்றேன், உடல்-மனம்-பொருளினால் எந்த நேரத்தில் அவசியமோ அந்த நேரத்தில் சேவைக்கு ஆஜராகி விடுகிறேன். இருப்பினும் இவர் மிகவும் நல்லவர் என்று என்னுடைய பெயரை ஆசிரியர் ஒருபோதும் வர்ணிப்பது கிடையாது. ஒருவேளை இவ்வாறு வரவில்லையெனில் பிறகு அடுத்த ரூபம் என்னவாக இருக்கும்? பெயர் கூறினாலும் பெயர் கேட்டு கேட்டு - நான் தான் செய்கின்றேன், என்னால் தான் செய்ய முடியும் என்று அபிமானத்தின் ரூபத்தில் வந்து விடும். அதிக சேவை செய்து விட்டு வந்திருக்கிறீர்கள், உங்களை யாரும் கேட்கவேயில்லை, ஒரு டம்ளர் தண்ணீர் கூட கொடுக்கவில்லை, கண்டுகொள்ளவேயில்லை, தன்னுடைய ஓய்வு அல்லது தனது காரியத்திலேயே பிசியாக இருக்கிறார்கள் எனில் செய்கிறேன் ஆனால் கேட்பதற்கு யாருமில்லை எனும் போது ஏன் செய்ய வேண்டும் - செய்வது-செய்யாமல் இருப்பது இரண்டும் ஒன்று தான் என்ற எண்ணம் வருகிறது. கேட்பதற்கு யாருமில்லை, இதற்கு ஓய்வாக வீட்டிலேயே அமர்ந்திருக்கலாம். தேவைப்படும் பொழுது சேவை செய்யலாம். இவ்வாறு விதவிதமாக விகாரங்கள் ராயல் ரூபத்தில் வருகிறது. மேலும் ஒரு விகாரம் வந்து விட்டது எனில் பேராசை இல்லை, ஆனால் அபிமானம் வந்து விட்டது அல்லது எனக்கு மரியாதை வேண்டும் என்ற உணர்வு வந்து விட்டது எனில் எங்கு விகாரம் இருக்கிறதோ அங்கு அதன் நான்கு துணைவர்கள் மறைமுகமாக இருக்கும். ஒன்றிற்கு நீங்கள் வாய்ப்பு கொடுத்து விட்டீர்கள் எனில் எது மறைமுகமாக இருக்கிறதோ அதுவும் தகுந்த நேரத்தில் தனது வாய்ப்பை எடுத்துக் கொண்டே இருக்கும். பிறகு ஆரம்பத்திலிருந்த போதை இப்போது கிடையாது, ஆரம்பத்தில் நன்றாக இருந்தேன், ஆரம்பத்தில் மனநிலை மிகவும் நன்றாக இருந்தது இப்பொழுது என்ன ஆனது என்று தெரியவில்லை என்று கூறுகிறீர்கள். மாயை திருட்டு வாசல் வழியாக வந்து விட்டது - இதைத் தான் தெரிந்து கொள்ள வேண்டும், தெரியவில்லை என்று கூறக் கூடாது.

மேலும் ஆசிரியர்களுக்கும் வருகிறது. ஆசிரியர்களுக்கு என்ன வேண்டும்? சென்டர் நன்றாக இருக்க வேண்டும், ஆடைகள் எப்படி வேண்டுமென்றாலும் இருக்கட்டும், ஆனால் சென்டர் இருப்பதற்கு தகுதி யானதாக இருந்தால் நன்றாக இருக்கும். மேலும் கூட இருப்பவர்களும் நன்றாக இருக்க வேண்டும், சென்டர் நன்றாக இருக்க வேண்டும், பாபாவின் பண்டாரி (உண்டியல்) நன்றாக இருக்க வேண்டும். நல்ல மாணவன் மாற்றலாகி சென்று விட்டால் மனம் சிறிது துடிக்கிறது. என்ன செய்வது, இவர் உதவியாளராக இருந்தார் அல்லவா,

இப்பொழுது சென்று விட்டார் என்று புரிந்து கொள்கிறீர்கள். உதவியாளர் மனிதரா? அல்லது தந்தையா? அந்த நேரத்தில் தென்படுவது யார்? மனிதனா? அல்லது தந்தையா? ஆக மாயாவின் இந்த ராயல் ரூபம் அஸ்திவாரத்தை அசைப்பதற்கு முயற்சி செய்கிறது. சர்வசக்திவான் துணையாக இருக்கின்றார் என்ற நிச்சயம் உங்களிடம் இருந்தால் தந்தை யாரையாவது நிமித்தம் ஆக்கி விடுவார். எனக்கு அபுவின் மாநாட்டில் குறைந்தது ஒரு முறையாவது அல்லது ஏதாவது பெரிய மாநாட்டில் வாய்ப்பு கிடைக்க வேண்டும். இல்லையெனில் யோகா பயிற்சி (சிவிர்) செய்விக்க வேண்டும் - இந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும் தானே என்று சிலர் நினைக்கின்றனர். சொற்பொழிவு செய்யாவிட்டாலும் மேடையிலாவது வர வேண்டும். திடீரென்று விநாசம் ஆகிவிடும், விநாசம் வரை என்னுடைய நம்பர் வராதா? நம்பர் வர வேண்டும் அல்லவா! ஆனால் பாப்தாதா முன்பே கூறியிருக்கின்றார் - தகுதி இருக்கிறது, வாய்ப்பு கிடைக்கிறது எனில் குஷியுடன் செய்யுங்கள். ஆனால் எனக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற சங்கல்பம் செய்வதும் யாசிப்பதாகும். வேண்டும்-வேண்டும் என்பது ராயல் யாசிப்பாகும். இவ்வாறு இருக்க வேண்டும் இவர் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை, தாதி-தீதியும் அனைவரையும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. யார் முன்னால் வருகிறார்களோ அவர்களை முன்நிறுத்தி விடுகிறார்கள் - இந்த சங்கல்பம் செய்வதும் சூட்சுமத்தில் யாசிப்பதாகும். ஆனால் பாப்தாதா கூறியிருக்கின்றார் - உங்களது ஏதாவது விசேஷதாவின் காரணத்தினால் நீங்கள் மேடைக்கு வந்து விட்டீர்கள், யோகா கிடையாது, மனநிலை அந்த அளவிற்கு நன்றாக கிடையாது. ஆனால் வார்த்தைகளில், ஈர்க்கும் சக்தியின் விசே'தா இருந்தால் வாய்ப்பு கிடைத்து விடுகிறது. ஏனெனில் சிலரது வார்த்தைகளில் இனிமை இருக்கும், தெளிவு இருக்கும் மற்றும் ஈர்ப்பு சக்தி இருக்கிறது எனில் இங்கு, அங்கு என்று பல உதாரணங்களை ஈர்த்து கூறுவார்கள். ஆகையால் அவர்களது பெயரும் பிரபலமாகி விடுகிறது. யார் வேண்டும்? இன்னார் வேண்டும். யாரை அழைக்க வேண்டும்? இன்னாரை வர வேண்டும். யோகாவில் குறை இருக்கலாம் இதில் நம்பர் இறுதியாவது கிடையாது. இவர் எவ்வளவு சொற்பொழிவு செய்தார்? அல்லது இவர் எத்தனை மாணவர்களை அல்லது சென்டர்களை திறந்தார்? என்பதில் இறுதி நம்பர் முடிவாவது கிடையாது. ஆனால் எத்தனை பேரை தகுதி யானவராக ஆக்கினார்? சென்டர் திறப்பது பெரிய விசயம் கிடையாது, ஆனால் எத்தனை தகுதியான ஆத்மாக்களை தயார் செய்திருக்கிறீர்கள்? 30 சென்டர்களுக்கு பொறுப்பாளர் என்ற பெயர் கிடைத்து விட்டது. ஆனால் அந்த 30-ல் 15 அசைந்து கொண்டிருக்கிறது, 15 நன்றாக இருக்கிறது எனில் இலாபம் ஏற்பட்டதா? அல்லது பெயர் மட்டும் கிடைத்ததா? இன்னாருக்கு 30 சேவை நிலையங்கள் இருக்கிறது என்ற பெயர் மட்டும் கிடைத்து விடுகிறது. ஆனால் இதன் மூலம் நம்பர் கிடைத்து விடாது. இறுதி நம்பர் எத்தனை பேருக்கு சுகம் கொடுத்தீர்கள்? எந்த அளவிற்கு சுயம் சக்திசாலியாக இருக்கிறீர்கள் என்பதைப் பொருத்து கிடைக்கும். ஆகையால் வேண்டும்- வேண்டும் என்பதை அழித்து விடுங்கள். இல்லையெனில் யோகா வராது. இந்த இடத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது, என்னை அழைக்கவில்லை. நேற்றைய முன்தினம் இங்கு நடை பெற்றது, நேற்று இங்கு நடைபெற்றது, இன்று இங்கு நடைபெற்றது என்று தினமும் இதையே பார்த்துக் கொண்டிருப்பீர்கள். பிறகு யோக செய்ய முடியுமா? அல்லது எண்ணிக் கொண்டே இருப்பீர்களா?

ஆக முக்கிய விசயம் என்னவெனில் யதார்த்த நிச்சயத்தை உறுதியாக்குங்கள். நான் ஆத்மா, தந்தை சர்வசக்திவான் என்று கூறிவிடுகிறீர்கள். ஆனால் நடைமுறையில், காரியத்தில் கொண்டு வர வேண்டும். தந்தை சர்வசக்திவான், ஆனால் மாயை என்னை அசைத்துக் கொண்டிருக்கிறது எனில் உங்களது தந்தை சர்வசக்திவான் என்று யார் ஏற்றுக் கொள்வார்கள்? ஏனெனில் அவரை விட உயர்ந்தவர் வேறு யாருமில்லை. எனவே பாப்தாதா இன்று நிச்சயத்தின் அஸ்திவாரத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். புதியவர்களாக இருந்தாலும், பழையவர்களாக இருந்தாலும் இந்த நிச்சயத்தின் அஸ்திவாரத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள் மற்றும் தகுந்த நேரத்தில் பயன்படுத்துங்கள். நேரம் கடந்த பின்பு தந்தையின் முன் பட்சாதாபத்தின் ரூபத்தில் வருகிறீர்கள் - என்ன செய்வது பாபா, நடந்து விட்டது. நீங்கள் கருணையுள்ளம் உடையவர்-கருணை காட்டுங்கள் இதை என்னவென்று கூறுவது? இதுவும் ராயல் பட்சாதாபம் ஆகும். துணையாக இருக்கிறார் எனில் யாருக்கும் தைரியம் இருக்காது, நிச்சயபுத்தி என்றாலே வெற்றி. ஏதாவது கணக்கு-வழக்கு வருகிறது என்றாலும் மனதை அசைத்து விடக் கூடாது. ஸ்திதியை ஏற்ற இறக்கம் ஆக்காதீர்கள். மாயா வந்து விட்டது, உடனேயே அதை தூரத்திலேயே அழித்து விடுங்கள். இப்பொழுது போர் வீரனாக ஆகாதீர்கள். சிலர் இப்பொழுது நிரந்தர யோகி கிடையாது. சில நேரம் யோகியாக இருக்கிறார்கள், சில நேரம் யுத்தம் செய்யும் போர் வீரனாக இருக்கிறார்கள். ஆனால் தன்னை என்னவென்று கூறிக் கொள்கிறீர்கள்? போர் வீரன் என்றா? அல்லது யோகி? சகஜயோகி என்று கூறிக் கொள்கிறீர்கள். யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ அவர் களுக்கு பாப்தாதா பாக்கியத்தை பிராப்தியாக அடைவதற்கான வாழ்த்துக்களை மீண்டும் கொடுக் கின்றார். வாழ்த்தின் கூடவே அஸ்திவாரம் நம்பர் ஒன்னாக இருக்கிறதா? அல்லது இரண்டாம் நம்பராக இருக்கிறதா? என்று சோதனையும் செய்ய வேண்டும்.

ஞானம்-யோகம் மிக நன்றாக இருக்கிறது என்று சிலர் கூறுகின்றனர். நன்றாக இருக்கிறது - அது சரி தான். ஆனால் செயலில் கொண்டு வருகிறீர்களா? ஞானம் என்றால் ஆத்மா, பரமாத்மா, நாடகம் என்று கூறக் கூடாது. ஞானம் என்றால் புரிந்து கொள்வது. புத்திசாலிகள் நேரத்திற்குத் தகுந்தாற் போன்று புத்திசாலிதனத்தின் மூலம் வெற்றி சதா வெற்றி அடைவார்கள். வாழ்க்கையில் துக்கம் ஏற்படும் பொழுது என்ன நினைப்பீர்கள்? எனக்கு இது ஏன் நடைபெறுகிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை என்று தான் கூறுவீர்கள். ஆக புத்திசாலிகளாக இருக்கிறீர்களா? ஞானியாக இருக்கிறீர்களா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள்? (ஆம்) ஆம் என்று மிக நன்றாக கூறுகிறீர்கள். புத்திசாலியின் அடையாளம் ஒருபோதும் ஏமாற்றம் அடையமாட்டார். சதா சுத்தமாக இருப்பது மற்றும் தெளிவான புத்தியுடன் இருப்பது - இது ஞானத்தின் அடையாளம் மற்றும் யோகியின் அடையாளமாகும். சுத்தமாகவும் இருக்க வேண்டும் மற்றும் தெளிவாகவும் இருக்க வேண்டும். யோகிகள் ஒருபோதும் தெரியவில்லை, தெரியவில்லை என்று கூறமாட்டார்கள். அவர்களது புத்தி சதா தெளிவாகவே இருக்கும். தாரணை சொரூபத்தின் அடையாளம் சதா சுயம் டபுள் லைட்டாக இருப்பார்கள். எவ்வளவு பொறுப்புகள் இருந்தாலும் தாரணை மூர்த்திகள் சதா டபுள் லைட்டாக இருப்பார்கள். மேளா நடைபெற்றாலும், சண்டை சச்சரவுகள் இருந்தாலும் இரண்டிலும் டபுள் லைட். சேவாதாரியின் அடையாளம் சதா பொறுப்புணர்வு மற்றும் பணிவு. ஆக இவை அனைத்தையும்

தனக்குள் சோதனை செய்யுங்கள். நான்கு பாடங்களிலும் இறை மாணவனாக இருக்கிறேன் என்று அனைவரும் கூறி விடுகிறீர்கள். அடையாளங்கள் தென்பட வேண்டும்.

ஆக புதியவர்கள் என்ன செய்வீர்கள்? தனது நிச்சயத்தை இன்னும் உறுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இல்லையெனில் இரண்டு ஆண்டுகள் இருப்பீர்கள், மூன்று ஆண்டுகள் இருப்பீர்கள் பிறகு மீண்டும் பழைய உலகிற்கு சென்று விடுவீர்கள். யார் திரும்பிச் செல்கிறார்களோ அவர்களால் அந்த உலகிலும் செட் ஆக முடியாது. இந்த உலகிலும் இருக்க முடியாது, அந்த உலகிலும் இருக்க முடியாது. ஆகையால் தனது அஸ்திவாரத்தை மிகவும் உறுதியாக ஆக்குங்கள். சர்வசக்திவான் தந்தை கூடவே இருக்கின்றார் என்பதை அனுபவம் செய்யுங்கள். ஒரு தந்தையை மட்டும் அனுபவம் செய்தாலே போதும், அனைத்திலும் தேர்ச்சி பெற்று விடுவீர்கள். இன்றைய நாட்களில் பிரதம மந்திரி அல்லது மந்திரி இருக்கிறார், அவரது துணையின் போதையும் இருக்கிறது அல்லவா! இவர் சர்வசக்திவான் ஆவார். நல்லது.

நல்லது. நாலாபுறங்களிலும் உள்ள சதா சிரேஷ்ட பாக்கியவான் பாக்கியவிதாதாவை தன்னுடைய வராக ஆக்கிக் கொண்ட சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பாப்தாதாவின் ஸ்ரீமத்தை பெற்று அதன்படி நடந்த அனைத்து நல்ல குழந்தைகளுக்கு, சேவையில் சதா உறுதியாக இருக்கக் கூடி சண்டை, சச்சரவிலிருந்து விடுபட்டு மற்றும் பரமாத்ம சந்திப்பு மேளா கொண்டாடக் கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

நல்லது, இரட்டை அயல்நாட்டினருக்கு இரட்டை போதை இருக்கிறது தானே? இரட்டை அயல்நாட்டினர் என்றால் டபுள் லைட், டபுள் போதை மற்றும் டபுள் பாப்தாதா மற்றும் குடும்பத்தின் அன்பு. புரிந்ததா?

வரதானம்: தன்னுடையவர் என்ற அதிகார அனுபவத்தின் மூலம் அடிமைதனத்தை சமாப்தித செய்யக் கூடிய சர்வ அதிகாரி ஆகுக.

தந்தையை தன்னுடையவராக ஆக்குவது என்றால் தனது அதிகாரம் அனுபவம் ஆவதாகும். எங்கு அதிகாரம் இருக்கிறதோ, அங்கு சுயத்தின் அடிமைத்தனம், சம்பந்தம்-தொடர்பில் வரும் அடிமைத் தனம், இயற்கையின் பிரச்சனைகளில் வரும் அடிமைத்தனம் இருக்காது. இந்த அனைத்து விதமான அடிமைத்தனம் சமாப்தி ஆகிவிடும் போது சர்வ அதிகாரி ஆகிவிடுவீர்கள். யாரெல்லாம் தந்தையை அறிந்திருக்கிறார்களோ, ஏற்றுக் கொண்டு தன்னுடையவராக ஆக்கியிருக்கிறார்களோ அவர்களே மகான் மற்றும் அதிகாரிகள் ஆவர்.

சுலோகன்: தனது சன்ஸ்காரம் மற்றும் குணங்களை அனைவருடனும் சேர்ந்து நடத்துவது தான் விசேஷ ஆத்மாக்களின் விசேஷதா ஆகும்.